(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2(4).]**

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 ஜூன் 06, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 ஜூன் 17, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 மார்ச் 27 ஆம் திகதிய 2429/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 மே 05 ஆம் திகதிய 2435/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2025 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2430/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— வெளிநாட்டு தீர்ப்புகளைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2024 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வெளிநாட்டு தீர்ப்புகளைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் மற்றும் 1(2) ஆம் பிரிவின் கீழும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2025 மார்ச் 28 ஆம் திகதிய 2429/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூன் 19, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# 2025 ஜூலை 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

496/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஒளிபரப்பாகும் இலங்கைக்குரிய தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, அரச தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் எனும் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெகுசன ஊடகங்களுக்காக நெறிமுறைக் கோவையொன்று காணப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி நெறிமுறைக் கோவை இலங்கைக்குரிய தொலைக்காட்சி அலைவரிசைகளில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்பதையும்;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகளில் இன்றளவில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் தொடர்பாக எவ்வாறு கவனம் செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சிகள் தொடர்பாக புலனாய்வு ரீதியான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

516/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய சனாதிபதியின் நியமனத்தை அடுத்து ஏழு குற்றச் செயல்கள் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டதை சனாதிபதி அவர்கள் அறிவித்தார் என்பதை அவர் அறிவாரா;

(ii) 2011 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் காணாமலாக்கப்பட்ட ‘லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகாநந்தன்’ ஆகிய இரண்டு அரசியல் செயற்பாட்டாளர்களின் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் இன்றளவிலான முன்னேற்றம் யாது;

(iii) இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல் நிலை முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற ஆயினும் இற்றைவரையில் தீர்க்கப்படாத ஏதேனுமொரு காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணைகள் இன்றளவில் நிறைவடைந்துள்ளதா;

(iv) மேற்படி காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் தாமதமாக்கப்பட்டமைக்கு அரசியல் தலையீடுகள் காரணமாக அமைந்துள்ளனவா;

(v) ஆமெனின், அது பற்றி மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

725/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, பீடம் வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மிகத் தீவிரமாக இடம்பெற்று வருவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிலையை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

793/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் தெதுறுஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்திற்கு இணையாக ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்க் கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளுள் கருத்திட்டத்திற்குரியதான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் பணிகளை நிறைவு செய்வதிலுள்ள தடைகள் யாவை என்பதையும்;

(iv) பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

845/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளதுமான வரையறுக்கப்பட்ட பல்நோக்குச் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிச் சங்கங்கள் மற்றும் மேற்படி வங்கிகளின் கிளைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களையும் வங்கிச் சங்கங்களையும் தாபிப்பதில் பின்பற்றப்பட்டுள்ள முறைமை யாது என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட வட மத்திய மாகாண சௌபாக்கியா கூட்டுறவுச் சங்கம் (SCD) மற்றும் வரையறுக்கப்பட்ட அனுராதபுர மாவட்ட கிராமிய மூலதன அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (RCD) என்ற பெயரில் இரண்டு சங்கங்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சங்கமும் ஆரம்பிக்கப்பட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி முகவரிகளின் தற்போதைய உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி சங்கங்களைத் தாபிக்கின்றபோது ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கட்டமைப்பு மற்றும் முறைமைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், பின்பற்றப்பட்டுள்ள முறைமை யாது என்பதையும்;

(vi) மேற்படி சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற போது வடமத்திய மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இன்றேல், அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முறைமை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

849/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் காணியொன்று துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற போது அக்காணியில் இருந்து குறிப்பிட்டளவு நிலப்பகுதியை பொதுக் காணியாகப் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட பிரதேச சபையானது குறித்த பொதுக் காணியை, குடியிருப்பாளர்களின் பொதுவான தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதையும்;

(iii) எக்காரணம் கொண்டும் பொதுக் காணியைத் தனியார் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மினுவாங்கொடை பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுக் காணிகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு காணியின் பரப்பளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மினுவாங்கொடை பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுக் காணிகள் தற்போது சில தனிநபர்களால் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நபர்களின் பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) உள்ளூர் அரசியல்வாதியின் சகோதரர் ஒருவர் நில்பனாகொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள 'அம்ப செவன வத்த' காணிக்குரிய பொதுக் காணியில் சட்டவிரோத கட்டுமானம் மற்றும் காணி நிரப்புதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அவருக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

865/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை உற்பத்தியின் போது, இலங்கையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் இருந்து கழிவுத் தேயிலை/மீள் தயாரிப்புத் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும்;

(ii) மேற்படி கழிவுத் தேயிலையானது, இலங்கை தேயிலைச் சபையின் அனுமதிப்பத்திரத்தின் கீழ் தொழிற்சாலையிலிருந்து அப்புறப்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது என்பதையும்;

(iii) இருப்பினும், மேற்படி அப்புறப்படுத்தும் செயன்முறையானது 100% சட்டப்பூர்வமாக இடம்பெறுவதில்லை என்பதையும்;

(iv) மேற்படி கழிவுத் தேயிலையானது, CTC தேயிலை உற்பத்தித் தொழிற்சாலை களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை எனப் பெயரிடப்பட்டு, கொழும்பில் இடம்பெறும் தேயிலை ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது என்பதையும்;

(v) மேற்படி கழிவுத் தேயிலையானது சட்டவிரோத வழிகளூடாக ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதையும்;

(vi) மேற்படி நிலைமையானது தரமான தேயிலை உற்பத்தி செயற்பாட்டுக்கு தடையாக இருப்பதுடன் ‘Ceylon Tea’ யின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், கழிவுத் தேயிலை தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) கழிவுத் தேயிலை ஏற்றுமதியைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், இலங்கை தேயிலைச் சபையின் மேற்பார்வையின் கீழ் கழிவுத் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

872/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தேயிலை மீள் பயிரிடல் நடவடிக்கைகளுக்கு, இலக்காக கொள்ளப்பட்டிருந்த காணிகளின் அளவு மற்றும் தேயிலை மீள் பயிரிடப்பட்ட காணிகளின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) தேயிலை மீள் பயிரிடப்பட்ட காணிகளுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணை அடிப்படையில் மானியத்தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தவணைத் தொகை செலுத்தப்பட்ட முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

876/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

915/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டம் ஒவ்வொன்றினதும் மதிப்பீட்டுத்தொகை, கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, இன்றளவில் செலவிட்டுள்ள பணத்தொகை, பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை இன்றளவில் நீர் வசதி வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் கருத்திட்ட ஒப்பந்ததாரரின்/ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நீர்வழங்கல் கருத்திட்டங்களில் இதுவரையில் நீர்வசதி வழங்கப்படாத கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் தோல்வியடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் ஒவ்வொன்றுக்குமான பெறுகைச் செயன்முறைக்குப் பொறுப்பாக இருந்த அலுவலர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) பெறுகைச் செயன்முறையில் ஊழல் அல்லது முறைகேடுகள் இடம்பெற்று இருப்பின், அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2025 ஜூலை 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

614/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(ii) பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தனிநபர்களால் இன்றளவில் மேற்படி வைத்தியசாலைக்குச் சொந்தமான காணிகள் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நிலைமை வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கை களுக்குத் தடையாக அமைவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

637/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுவரை இலங்கையின் மீன் அறுவடை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் மீன் ஏற்றுமதியின் மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) இலங்கையின் மீன் அறுவடையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

651/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜா-எல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் ராகம - பேரலந்த வாவி உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாவி ஒரு 'நிலத்தோற்றக் கருத்திட்டமாக' அபிவிருத்தி செய்யப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கு இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

712/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள் மற்றும் கொலைகள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலர்களுக்கு எதிராக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் அவற்றுள் எத்தனை வழக்குகள் நிறைவடைந்துள்ளன என்பதையும்;

(iii) அவ்வழக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில் மீளப் பெறப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவ்வழக்குகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

950/2025

கௌரவ றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள தபால் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடமொன்று இல்லாத காரணத்தால் மேற்படி தபால் அலுவலகம் தற்காலிக கட்டடமொன்றில் இயங்குகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தபால் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அக் கட்டடம் எக்காலகட்டத்தில் நிர்மாணிக்கப்படுமென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜூலை 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

14/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி கருத்திட்டங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி கருத்திட்டங்கள் இன்றளவில் தோல்வியுற்று, அதனூடாக பணம் வீண் விரயமாக்கப்பட்டுள்ளதென கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(v) அவ்வாறாயின், அவ்வாறு வீண் விரயமாக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(vi) மேற்படி கருத்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

114/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புலனாய்வு செய்வதற்காக இதுவரை நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு ஆணைக்குழுவின் மூலமும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

716/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்திலுள்ள அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது அஸ்வெசும பயனாளிகளின் வகைப்படுத்தலுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) களுத்துறை மாவட்டத்திலுள்ள அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்தல் தொகுதியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கிடைக்கப்பெற வேண்டிய எனினும் இதுவரையில் குறித்த நலன்புரி நன்மைகள் கிடைக்கப்பெறாத அகலவத்தை தேர்தல் தொகுதியில் வாழ்கின்ற குடும்பங்கள் தொடர்பில் அறிந்துள்ளாரா என்பதையும்;

(v) அவர்களுக்காக எதிர்காலத்தில் சலுகை அடிப்படையிலான ஏதேனும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறைந்த வருமானம் பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அஸ்வெசும பயனாளிகள் தெரிவின்போது பின்பற்றப்பட்டுள்ள முறையியல் தொடர்பில் திருப்தியடைய முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

718/2025

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள மொத்த வயற் காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) 2024/2025 பெரும்போகத்தில் மேற்படி மாவட்டத்தின் மொத்த நெல் அறுவடை யாது என்பதையும்;

(iii) நெல் அறுவடை செய்வதற்கு முன்னதாக மொனராகலை மாவட்டத்தின் அனைத்து நெல் விவசாயிகளுக்கும் உர மானியம் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) மேற்படி நெல் அறுவடையிலிருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) மொனராகலை மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கை, அவை ஒவ்வொன்றினதும் முகவரிகள் மற்றும் அவற்றின் கொள்ளளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

919/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு – மட்டக்களப்பு இரவு தபால் புகையிரதத்தில் முதலாம் வகுப்பு உறங்கல் இருக்கை வசதி தற்போது கிடைக்கப்பெறுவதில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இந்த வசதி கிடைக்கப்பெறாமைக்கான காரணங்களையும்;

(iii) இந்த வசதி மீண்டும் அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு – மட்டக்களப்பு இரவு தபால் புகையிரதத்தில் உறங்கல் இருக்கை வசதியுள்ள முதலாம் வகுப்பு (குளிரூட்டப்படாத) பயணச்சீட்டு ஒன்றின் விலை ரூபா 5000/= ஆக உள்ள அதே நேரம் ஏனைய பயணப் பாதைகளில் உறங்கல் இருக்கை வசதியுள்ள முதலாம் வகுப்பு (குளிரூட்டப்பட்ட) பயணச்சீட்டு ஒன்றின் விலை சுமார் ரூபா 2,800/= ஆகும் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இந்த விலை வித்தியாசத்திற்கான காரணத்தையும்;

(iii) இத்தகைய ஒரு வெளிப்படையான பாகுபாட்டிற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

923/2025

கௌரவ சுனில் ரத்னசிறி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை (SLIIT) நிறுவுவதற்கு அப்போதைய வர்த்தக, வாணிப அமைச்சு நிதி வசதி வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நிதித்தொகை யாது என்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) 2020 தொடக்கம் 2024 வரையில் மேற்படி நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனம் வீழ்ச்சிப் பாதையில் பயணிக்குமாயின், அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இந் நிறுவனத்தை நட்டமடையும் நிலைக்கு உள்ளாக்கிய முகாமைத்துவத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

953/2025

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பிரதேச வைத்தியசாலையொன்றில் இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கமைவாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைந்துள்ள அரசாங்க பிரதேச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்கு நிரந்தர நியமனம் பெற்ற தாதியர்கள் இன்றளவில் குறித்த வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ளனரா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) அதற்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தரமுயர்த்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) வைத்தியசாலையின் வகைப்படுத்தலுக்கு அமைவாக மேற்படி வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கமைவாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

973/2025

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அலுமினியக் கைத்தொழிலாளர்களின் தேவைக்கு போதுமானளவு அலுமினியத்தை அரசாங்கம் வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அலுமினியத்தை போலியான முறையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதி செய்வதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அலுமினியக் கைத்தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

974/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தின், சம்மாந்துறை நீர்ப்பாசன அலுவலகத்தினூடாக பராமரிக்கப்படுகின்ற வலது கரை பிரதான கால்வாயில் உள்ள 'தொப்பிக்குடா' எனும் பிரதான கால்வாய் நிரம்பி வழியும் காலங்களில் சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயற் காணிகள் நீரில் மூழ்குவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கால்வாயை நிரந்தரமாகப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியை நீர்ப்பாசனத் திணைக்களம் ஒதுக்கியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒதுக்கீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கால்வாயின் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்குத் தேவையான காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

979/2025

கௌரவ திலிண சமரகோன்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் 'சுபீட்சமான உற்பத்திக் கிராமங்களை' நிறுவும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் பயனைப் பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இயங்குநிலையிலுள்ள கிராமங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி வேலைத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்துக்கு அறிமுகப்படுத்தும் புதிய முன்மொழிவுகள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி கடனை மீள அறவிடுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) தற்போது வரை மீள அறவிடப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அறவிடுவதற்கு எஞ்சியுள்ள கடன் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2025

கௌரவ ருவன் மாபலகம,— பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.47/2025

கௌரவ ரோஹண பண்டார,— விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.